ॐ

संस्कृतभाषाशब्दसमुद्रः

संयुक्ताक्षरपदगर्भः

द्वितीयभागः — द्वितीयस्तरङ्गः

தமிழிற்பொருளுடன்

வடமொழிச்சொற்கடல்

இரண்டாம் பாகம் — இரண்டாந்தரங்கம்

ப்ரஹ்மஶ்ரீ
பாபநாசம் சிவன்

விலை ரூ. 1—8—0

உலகத்தமிழ்க் கருத்தரங்கு
654.
கலைக்காட்சிக் குழு

ॐ

संस्कृतभाषाशब्दसमुद्रः

[द्राविडभाषार्थसहितः]

द्वितीयभागः — द्वितीयस्तरङ्गः

தமிழிற்பொருளுடன்

வடமொழிச்சொற்கடல்

இரண்டாம் பாகம் — இரண்டாந்தரங்கம்

ब्रह्मश्री
पापनाशशिवनामार्येण
नूतनरीत्यासंग्रथितोयं

ப்ரஹ்மஶ்ரீ
பாபநாசம் சிவன் அவர்களால்
புது முறையில் தொகுக்கப்பெற்றது.

விலை ரூ. 1—8—0

द्वितीयभागः

द्वितीयस्तरङ्गः

संयुक्ताक्षरपदगर्भः

இரண்டாம் பாகம்

இரண்டாந்தரங்கம்

விலை ரூ. 1—8—0

HOMOEOPATHY PRESS, KUMBAKONAM.

குறிப்பு

பிரும்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படும் சிறந்த ஒரு நூலுக்கு அடியேன் ஒரு குறிப்பு எழுதுவது எந்த விதத்திலும் பொருத்தமில்லாததுதான். இருந்தாலும், ஒரு பெரியவரை வணங்கும் முறையிலே இந்தச் சிறிய குறிப்பு எழுதப்படுகிறது.

நான் ஒரு சிறு பையனாகப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போதே, சில திருவிழாக்களில் ஸ்ரீ சிவன் அவர்கள் நடத்திவந்த பஜனைகளில் சேர்ந்து கைத்தாளம் போட்டுக்கூடப் பாடி இருக்கிறேன். அது எனக்கு அப்பொழுது ஏற்பட்ட பக்தியினாலல்ல ஆனால் முடிவில் கிடைக்கும் சுண்டலுக்காகவே என்பது நான் சொல்லாமலே விளங்கும்! ஆனால் சுண்டலுக்காக ஆரம்பித்த பஜனை நாளடைவில் பக்தியில் கொண்டுபோய்விடுகிறது என்பது கண் கூடாக நாம் காணும் விஷயம்.

இம்மாதிரியாக, பிறர் அறியாவண்ணம், சிரமமன்னியில், மக்களிடையே பக்தியையும், அறிவையும் ஊட்டிய மஹான் நமது சிவன் என்றால் மிகையாகாது. தற்காலத்தில் வடமொழி தேவையா, அதனால் பிரயோஜனமுண்டா என்றெல்லாம் பிரச்னைகள் எழுந்திருக்கின்றன. வடமொழி ஒரு இறந்த பாஷை என்று கூறுபவர்கள் ஒரு சாரார். நமது வடமொழியைக் காப்பாற்ற வேண்டுமென்று கூறுபவர் மற்றுமொரு சாரர். ஆனால் வடமொழியைக் காப்பாற்றவேண்டுமென்று கூறுபவர்களில், அதற்கு என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்னும் விஷயத்தில் அதிக அக்கரை கொண்டு காரியத்தில் இறங்குபவர்கள் மிகச் சொற்பமே. ஆனால் நமது சிவன் அவர்கள் இந்த "வடமொழிச் சொற்கடல்" என்னும் புத்தகங்களை வெளியிட்டதன் மூலம், உண்மையிலேயே வடமொழிக் கடலைக் கடைந்து அமிர்தத்தை எடுத்தே கொடுத்துவிட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். வடமொழியைக் காப்பாற்றி நமது சந்ததியார்களுக்கு வைத்துவிட்டுப்போவதில் சிவன் அவர்களின் பணி மஹத்தானது.

இப்புத்தகங்களைத் தொகுக்க ஸ்ரீ சிவன் அவர்களுக்கு சுமார் எட்டு வருட காலங்கள் ஆயிற்று என்பது எனக்குத் தெரியும். இதற்கு எவ்வளவு பொறுமையும் விடாமுயற்சியும் தேவை என்பது சொல்லி முடியாது; சிந்தித்துத்தான் பார்க்கவேண்டும். தானறிந்ததை

மற்றேரும் அறிந்துகொள்ளவேண்டுமென்ற பெருநோக்கே இந்த ஆர்வத்திற்குக் காரணம். இப்புத்தகம் வடமொழி நூல்களிடையே ஒரு தனியான இடம் பெற்றுவிட்டது என்பதில் ஐயமில்லை.

புத்தகத்தின் விலை சற்று அதிகம் என்று சிலர் அபிப்பிராயப்படுவதாக அறிகிறேன். இந்த அபிப்பிராயம் சரியல்ல. இம்மாதிரியான ஒரு நூலை அதிலுள்ள பக்கங்களை மாத்திரம் பொருத்து விலை மதிப்பது உசிதமில்லை. அதிலுள்ள விஷயங்களைப்பொருத்தே மதிப்பிடவேண்டும், ஒரு வாரத்தில் பதினயிரக் கணக்கில் செலவு ஆகி அடுத்த வாரம், பற்பொடியோ. குங்குமமோ மடிக்க உபயோகமாகும் புத்தகங்கள் மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கலாம். ஆனால் இதுபோன்ற ஒரு புத்தகம் பல ஆண்டுகளுக்கு மாத்திரமல்ல, பல தலைமுறைகளுக்குக்கூட உபயோகமாகும்படி போற்றிவைக்கத் தகுந்தவை. தவிர, மதிப்புரைக்கென்றும், மாதிரிக் காப்பி என்றும் மட்டுமல்லாமல், பெரியோர்களுக்கு அன்பளிப்பாகவும், வாங்கச் சக்தியற்றவர்களுக்கு இலவசமாகவும் ஸ்ரீ சிவன் அவர்களால் புத்தகங்கள் வழங்கப்படுகிறது. இம்மாதிரியான முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கே, இதிலுள்ள அருமை, உண்மை, சிரமங்கள் தெரியும்.

ஸ்ரீ சிவன் அவர்கள் வயதின் காரணமாகவும், மற்றும் உடல் நிலை காரணமாகவும் சிறிது அசக்தராகவே தற்சமயம் இருக்கின்றார்கள். அவர்களிடம் மேலும் பல அருமையான விஷயங்கள் இருக்கின்றன. அவைகளை நமக்கும் நமது சந்ததியார்களுக்கும் அவர்கள் விட்டுப்போகும்படி அவர்களை ஊக்குவிக்கவேண்டியது நம் அனைவருடைய கடமையாகும்.

ஹோமியோ ஹவுஸ்,
பக்தபுரித் தெரு,
கும்பகோணம்.
20—5—'55

வி. ஆர். மூர்த்தி

॥ जयश्री राधाकृष्ण ॥

பெரியோர்களே !

நம் "பாபநாசம் சிவன்" அவர்கள் மூலம் தொகுக்கப்பட்ட ஸம்ஸ்க்ருத தமிழ் மொழி அகராதியைப பார்த்தேன். மிகவும் சிரமப் பட்டு, மிக அழகான முறையில் மிகத் தெளி வாய்த் தொகுத்திருக்கிறீர்கள். இத்தொகுப்பு பல கலைகளிலும் ஆர்வம் கொண்ட அனை வருக்கும் மிக அவச்யம். ஸம்ஸ்க்ருத பாஷா அப்யாஸம் எளிதில் கிடைத்துவிடும். தெய்வீகச் சடங்குகள் ஸம்ஸ்கிருதத்திலேயே அமைந் திருப்பதால், ஆஸ்திகர்களுக்கும் வைதிக மதத்திலிருக்கும் அனைவருக்கும் பேருதவி. நிற்க, சங்கீதம் முதலிய கலைகளில் ஆர்வ மில்லாத ஜனங்களே இருக்கமுடியாது. எந்த பாஷையிலும் பக்தியுடன் கீர்த்தனங்கள் செய் திருக்கும், மஹான்களுடைய கீர்த்தனங்கள் எல்லாம் பூர்ணமாக ஸம்ஸ்க்ருதச் சொற்க ளாலேயே நிறைந்திருப்பது ப்ரஸித்தமான விஷயம். ஆகையால் சங்கீதவித்வான்களும் ரஸிகர்களும் இந்த அகராதியைத் துணை கொள்வார்களானால் பொற்றுமரை மண முடைத்தாகும். இது ஒன்றுதான் 'சிவன்' அவர்களின் சிரமத்திற்குக் கைம்மாறுகவும் முடியும்.

நமஸ்காரம்

சுகப்ரஹ்மம்

என்னும்

S. RAMASWAMY

ஓம்

சப்த ப்ரஹ்மம்

ஆண்டவன் அருளும் பக்தியின் ஆர்வமும், வாழ்க்கையெலாம் பஜனையில் அர்ப்பணம் செய்துவரும் ஸ்ரீ பாபநாசம் சிவனை உடனிருந்து அனுபவிக்கும் பாக்யம் சிறிதுண்டு. அவர்களை ஓர் அவதார புருஷன் என்றே சொல்லவேண்டும். அவர்களை அறிந்தவர்கள் அவர்களை ஒரு சமுத்திரம் என்று சொல்லிவிடுவார்கள். அவர்கள் ஒரு அரும் பெரிய நூல் இயற்றியிருக்கின்றார்கள் அதாவது சப்த சமுத்திரம்.

இறைவன் பதினான்கு லோகங்களைப் படைத்து அதற்குள் புகுந்து விளையாடுகிறான். அவன் விளையாடுவதற்கு எத்தனையோ கணக்கற்ற சமுத்திரங்களை சிருஷ்டித்திருக்கிறான். ஜட சமுத்திரம், இசை சமுத்திரம், உயிர் சமுத்திரம், உணர்வு சமுத்திரம், பாஷா ஸமுத்திரம், எல்லாவற்றிற்கும் ஹேதுவான சப்த சமுத்திரம், ஆனந்த சமுத்திரம் இவைகளை முக்யமாய்ச் சொல்லலாம். சப்த ப்ரம்மமாய் நின்ற கடவுளை, நாத உபாஸனையாலும், பாஷை, பொருள், இசை உணர்ச்சிகளாலும் இவை கூட்டி அனுபவித்துவரும் சிவனவர்கள் ஒருவர்தாம் சப்த சமுத்திரத்தைக் கையாள முடியும். நம் நாட்டிற்கு இது பெரிய தான மென்று கருதுகின்றேன். ஆண்டவன் இந்த பெரியாரை வாழ்த்தி நல்ல சுக நலனுடன் மேன்மேலும் ஆத்மஞானத்திற்கு உதவியாய் இருக்கும் வகையில் பல அருங்கைங்கர்யங்கள் செய்யும்படியாய்த் தூண்டுவாராக! அரும் தொண்டு சிவன் செய்துவிட்டார். வாழ்த்தும் தொண்டாவது நமக்கீன்ற இறைவனுக்கு நன்றி.

'பால விலாஸ்'
மயிலை, மதராஸ்.
22—12—54

திருப்புகழ்மணி

பாபநாசம் சிவன்